முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.80/2022

நாள். 30.01.2026

பி.வா.சா.1 – திரு.அஸ்வின்குமார்

த/பெ - திரு.சுயம்பு ராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) வாதி உங்களுடைய சித்தி என்றால் சரி தான். வழக்கு தபசில் சொத்தை 2012 ம் ஆண்டு சுவாமி தாஸ் என்பவரிடம் இருந்து வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண். 1284/2 மேற்கடைய தெற்கடைய பாகம் 10 செண்டு ஆகும். தெற்கு வள்ளியூர் மெயின் ரோட்டிலிருந்து மேற்படி 10 செண்டு இடத்திற்கு பாதை செல்கிறது என்றால் சரி தான். அந்த பாதை தான் இவ்வழக்கில் 2 ம் அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

2) சர்வே எண். 1284/1 சி- ல் எத்தனை செண்டு கிரையம் வாங்கி உள்ளீர்கள் என்றால் 29 செண்டும், சர்வே எண். 1284/2 ஏ - ல் 2 1 செண்டும் ஆக மொத்தம் 50 செண்டு நிலத்தை பி.வா.சா.ஆ.5 மூலம் பாஸ்கரன் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளீர்கள் என்றால் சரி தான். மேற்படி சர்வே எண்ணில் உள்ள வீடுகளை எல்லாம் உங்கள் சித்தப்பா ராம பாண்டி என்பவர் பாஸ்கர் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கி உள்ளார் என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.30 03:49:49 +0530

3) நீங்கள் கிரையம் பெற்ற பகுதி மெயின் ரோட்டில் முகப்பு பகுதி ஆகும். உங்கள் சித்தப்பா ராம பாண்டி இடம் உங்கள் இடத்திற்கு தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரி தான். உங்களுடைய சித்தப்பா ராம பாண்டியின் இடத்திற்கு செல்வதற்கு உங்களுடைய ஆவணத்திலோ உங்கள் சித்தப்பா ராம பாண்டியின் ஆவணத்திலோ பாதை எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரி தான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.01.30 03:49:54 +0530